Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 83 | வியாழக்கிழமை 17 பெப்ரவரி 2022 | மாசி 05 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 1,217
மொத்தம் 6,31,816

**உயிரிழப்பு**
நேற்று 25
மொத்தம் 15,899

### காணாமல் ஆக்கப்பட்டோரை வெளிப்படுத்தக் கோரி

# 20ஆம் திகதி மாபெரும் பேரணி

கிளிநொச்சி, பெப்.17

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் 5 ஆண்டுகளை எட்டவுள்ளது. அன்றைய தினம் பெரும் போராட்டம் ஒன்றை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 15

# பயங்கரவாத தடைச் சட்டம் வேண்டாம்!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் வலியுறுத்து

**கொழும்பு, பெப்ரவரி 17**

**பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத்தொடர் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.** 15

## யாழ்ப்பாணத்தில் கையெழுத்து வேட்டை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தடை செய்யக் கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கையெழுத்துச் சேகரிக்கப்பட்டது. விரிவு 3ஆம் பக்கம்

## ஈழத்தமிழர்களுக்கான தீர்வு இந்தியாவின் கையிலேயே!

### அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.17

ஒருநாட்டின் அருகில் இருக்கும் பேரரசுதான் அந்த நாட்டின் சிறிய இனங்களின் பிரச்சினை தொடர்பாக முடிவெடுக்க முடியும். இலங்கையில் சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைக்கான தீர்வை இந்தியாவே வழங்க 15

## கஞ்சாவுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.17

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அல்வாய் பகுதியில் வைத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 25 வயதுடைய 15

## மாவாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.17

மாவா போதைப்பாக்கை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 38 வயதுடைய ஒருவர் மயிலங்காட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். சந்தேகநபர் 15

## யாழ். வருகிறார் மைத்திரி



யாழ்ப்பாணம், பெப்.17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மாநாட்டில் கலந்துகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் 15

## வடக்கில் மலேரியா; நீடிக்கிறது அபாயம்

கொழும்பு, பெப்.17

வடக்கு மாகாணத்தில் மலேரியாத் தொற்று அபாயம் காணப்படுகின்றது என்று சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் மலேரியா எதிர்ப்புப் பரப்புரையின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் 15

## உயிரிழந்தவர்களுக்கு பி.சி.ஆர். வேண்டாம்!

### சுகாதார அமைச்சு திடீர் சுற்றறிக்கை

கொழும்பு, பெப்.17

மருத்துவமனை அல்லது மருத்துவமனைக்கு வெளியே உயிரிழப்புக்கள் ஏற்படும்போது, உடற்கூற்றுப் பரிசோதனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவேண்டிய அவசியமில்லை என்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சட்ட மருத்துவ அதிகாரி பரிந்துரைக்கும் 15

## ஜெனிவாவில் காத்திருக்கிறது ஆபத்து!!

கொழும்பு, பெப்.17

நாட்டில் ஊடகச் சுதந்திரம் மீறப்பட்டு வருவது தொடர் 15




“இப்பவே உந்த மூன்வகைக் காய்ச்சலும் முயல் பாய்ச்சல் எண்டா போகப் போக குதிரை வேகமெடுத்தால் எல்லாம் அரோகரா தான் கண்டியளோ”

## மூன்றுவகையானகாய்ச்சல்; முயல் வேகத்தில் பாய்ச்சல்!

### எச்சரிக்கின்றது சுகாதார அமைச்சு

கொழும்பு, பெப்.17

நாட்டில் மூன்று வகையான காய்ச்சல்கள் தற்போது அதிவேகமாகப் பரவுகின்றன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எனவே காய்ச்சல் ஏற்பட்டு 48 மணித்தியாலத்துக்குள் மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளவேண்டும் 15

## மீனவர்கள் அத்துமீறலைத் தடுக்க இந்தியாவுடன் கலந்துரையாடல்

### கடற்றொழில் அமைச்சு கூறுகிறது

கொழும்பு, பெப்.17

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# தமிழீழத் தமிழர்களின் அரசியல் தீர்வில் நாடாளுமன்றத்தின் வகிபாகம் வேதனையானது

## சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், பெப். 17**

**சர்வதேச ரீதியாக நாங்கள் எமது அரசியல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ஒருசார்பான ஏதுவாக அமைகின்றது. அன்றாடப் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக்கொண்டுவந்து அவற்றைத் தீர்க்க முடியும். ஆனால், தமிழீழத் தமிழர்களின் அரசியல் தீர்வில் நாடாளுமன்றத்தின் வகிபாகம் தற்போது மிகவும் வேதனைக்குரிய அவல நிலையையே அடைந்துள்ளது.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஆறு கட்சிகள் இணைந்து நடத்தும் ஈழத்தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலைவரங்களும் கருத்தரங்கும் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பு நாடாளுமன்றத்தில் இயற்றப்படும்வரையில் நாடாளுமன்றமே தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் முக்கிய பங்குவகித்தது. 2009இல் இளைஞர்களின் ஆயுதங்கள் மௌனிக்கப்படும் வரை தமிழீழத் தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக நாடாளுமன்றத்தின் வகிபாகம் மிகக் குறைந்தே காணப்பட்டது.

எனினும் தமிழ்ப் பிரதிநிதிகள் 22 பேர் அப்போது இருந்தும் கூட அவர்களால் நாடாளுமன்றத்தில் தமிழ்மக்களின் தீர்வு தொடர்பாக எதுவும் செய்ய முடியவில்லை. காரணம் போர் நடந்துகொண்டிருந்தமையே. 2009ஆம் ஆண்டின் பின்னர் நாடாளுமன்ற தமிழ், சிங்கள உறுப்பினர்களுக்கிடையேயான இடைவெளி நீண்டு கொண்டு செல்வதை அவதானிக்கலாம். மலையகத் தமிழர்கள் சிலர் சிங்களத்தில் பேசுவதை சிங்கள உறுப்பினர்கள் புரிந்துகொள்கின்றார்கள்.

ஆனால் தமிழில் பேசுவோரின் பேச்சின் மொழிபெயர்ப்பைக் கூட கேட்கும் பொறுமை சிங்கள உறுப்பினர்களுக்கு இல்லை என்றே சொல்லலாம்.

அடுத்து தமிழ்ப் பேசும் உறுப்பினர்களின் தொகை குறைந்து வருகின்றது. அரசு தமிழ் பேசும் உறுப்பினர்களின் கருத்துக்களைப் பொருட்படுத்துவதில்லை. ஆங்கிலம்கூட பல சிங்கள உறுப்பினர்களுக்கு புரிவதில்லை. ஆகவே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றத்தின் வகிபாகம் குறைந்து கொண்டே செல்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரின் ஆர்ப்பாட்டங்கள், காணி அபகரிப்பை எதிர்க்கும் கிராமத்தவரின் எதிர்ப்புப் போராட்டங்கள், மீனவர்களின் போராட்டங்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நடைபவனி போன்றன மக்கள் தாங்களே களத்தில் முன்னின்றுபோராட வேண்டிய அத்தியாவசியத்தை அவர்களுக்கு உணர்த்தியுள்ளன.

நாடாளுமன்றத்தின் வகிபாகத்தை ஆராயும்போது ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

நாம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது ஒற்றையாட்சியின் கீழ் நாம் கோருவது சமஷ்டி அல்லது இணைப்பாட்சியையே! ஒற்றையாட்சி முறையைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் ஒருபோதும் அதன் இறுக்கத்தைத் தளரவிட முன்வரமாட்டார்கள். சமஷ்டி என்பது அந்த இறுக்கப் பிடியைத் தளரச் செய்வது. நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு சிங்களப் பிரதிநிதித்துவம் இருக்கும்போது சிங்கள மக்களின் அழுங்குப் பிடிக்குப் பாதிப்பு ஏற்படும் வண்ணம் எதனையும் செய்ய சிங்களப் பிரதிநிதிகள் எவரும் முன்வரமாட்டார்கள். இதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒற்றையாட்சியின்கீழ் அதிகாரமும் பலமும் கொண்டவர்கள் இணைப்பாட்சிக்கு ஒத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகவேதான் சர்வதேச கருத்துப் பரிமாற்றங்களின் மூலம் நெருக்குதல்களை ஒற்றையாட்சியின் மீது ஏற்படுத்த வேண்டிய காலகட்டம் தற்போது உருவாகியுள்ளது.

புதிய அரசமைப்பானது அதிகார மையத்தை மாகாணத்தில் இருந்து மாவட்டத்துக்கு மாற்ற இருக்கின்றது. மாவட்டங்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை உண்டுபண்ணி 'பார்த்தீர்களா! உங்கள் கிராமங்கள், மாவட்டங்கள் இனித் தம்மைத் தாமே ஆளப் போகின்றன' என்று கூறப்போகின்றார்கள். வடக்கு-கிழக்கு இணைப்பு, மாகாண அரசு அல்லது அரசுகள் என்பவற்றைத் தாண்டி மத்தியின் கைப்பொம்மைகளாக மாவட்டங்களை ஆக்கவிருக்கின்றார்கள்- என்றார். (ஒ-இ)

# சஜித் - சம்பிக்கவை இணைக்க மூத்த உறுப்பினர்கள் மும்முரம்

கொழும்பு, பெப். 17

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை யும், சம்பிக்க ரணவக்கவையும் நேரில் சந்திக்க வைத்து, முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மூத்த உறுப்பினர்கள் சிலர் இறங்கியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் திட்டத்தில் இருந்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, திடீரென '43ஆம் படையணி' எனும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார். குறித்த இயக்கத்தின் மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தியுள்ளார். 2024ஆம் ஆண்டில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க இவ்வாறு செயற்படுகின்றார் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. சம்பிக்கவின் சில நகர்வுகளால் அவர்மீது சஜித்தும் கடும் அதிருப்தியில் இருக்கின்றார். மாநாட்டின் பின்னர் சம்பிக்கவை சஜித் வெளிப்படையாகவே விமர்சிக்க ஆரம்பித்துள்ளார்.

இந்த நிலை தொடருமானால் எதிரணி பலவீனமடையும், இரண்டாக உடையும் என்பதால் இவ்விருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் இறங்கியுள்ளனர். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய மின்வெட்டே அரசின் அடுத்த பரிசு

## சஜித் சாடல்

கொழும்பு, பெப்.17

**அண்மையில் எரிவாயு வெடிப்பை மக்களுக்கு பரிசாக வழங்கிய அரசாங்கம் அடுத்த பரிசாக மின்வெட்டை மக்களுக்கு வழங்கவுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- சுபீட்சத்தின் தொலைநோக்குக்கு பதிலாக இருளின் தொலைநோக்கு பார்வையையே அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது. கருத்துச் சுதந்திரம், பேச்சு உரிமை, அரசியல் சுதந்திரம் போன்ற அனைத்து உரிமைகளையும் அரசாங்கம் மீறிச் செயற்படுகிறது. 24 மணி நேரமும் மக்களின் உரிமைகளை மீறும் அரசாங்கமே இன்று ஆட்சியில் உள்ளது - என்றார். (வ-இ)

## மார்ச் 14 முதல் பட்டதாரிகளும் போராட்டம்

கொழும்பு,பெப்.17

அரச மற்றும் மாகாண அரச சேவைக்கு ஆள் சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகள், எதிர்வரும் மார்ச் 14 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்று அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள முரண்பாடுகளை நீக்குதல், இரத்துச் செய்யப்பட்ட சிறப்புச் செயற்திறன் மதிப்பீட்டு முறையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

## கொரோனா 4 நாள்களில் 3 பேர் சாவு!

சாவகச்சேரி,பெப்.17



தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 4 நாள்களில் மட்டும், 3 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

தென்மராட்சிக் கிழக்கைச் சேர்ந்த 58 வயதுடைய நபர், நுணாவிலைச் சேர்ந்த 78 வயது மூதாட்டி, மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த மூதாட்டி, மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் ஆகியோர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஒ-4-9)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு; யாழ்ப்பாணத்தில் கையெழுத்துவேட்டை

யாழ்ப்பாணம்,பெப்.17

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி, யாழ்ப்பாணத்தில் நேற்று கையெழுத்துச் சேகரிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பேருந்து நிலைய வளாகத்தில் கையெழுத்துச் சேகரிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா உள்ளிட்டோர் தமது கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர். (ஒ-4.27)

## ஆசிரியருக்கு ஒரு கடிதம்

தங்கள் பத்திரிகையில் நாள்தோறும் வெளியாகின்ற 'புதினம் தெரியுமோ?' பத்தியை ஆர்வத்துடன் படித்துவருகிறேன். எமது சமூகத்தில் சீர்செய்ய வேண்டிய விடயங்களைத் துணிவுடனும், நேர்மையுடனும் எழுதுவது பாராட்டுக்குரியது.

கடந்த 12.02.2022 அன்று வெளியான பத்தியில், வடமாகாணத்திலுள்ள சித்த வைத்தியசாலைகளுக்காக அச்சுவேலியில் சித்தமருந்துகள் செய்யும் நிலையத்தில் 'சோரியாஸிஸ்' என்னும் தோல்நோயுள்ள ஊழியர் ஒருவர் கடமையாற்றுவதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தி எனக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. என்னைப்போலச் சித்த வைத்தியத்தில் நம்பிக்கையுள்ள பலரும் இந்த விடயம் குறித்து விசனம் தெரிவித்தனர். எனவே, இவ்வாறான செய்திகள் வெளியாக இடங்கொடுக்காத வகையில் நிறுவனங்களை நிர்வகிப்பது திறமையுள்ள அதிகாரிகளின் கடமையாகும்.

பொதுவாக, ஆங்கில மற்றும் ஆயுள்வேத மருந்துகளைத் தயாரிக்கும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் வருடத்துக்கொரு தடவை முழுமையான மருத்துவப்பரிசோதனை செய்வது அவசியமாகும். அவ்வாறு பரிசோதனை செய்வது குறித்த நிறுவனங்களின் உயர்ந்த தரத்தையும், நம்பகத்தன்மையையும் சரியாகப் பேணுவதற்கு உதவும். குறிப்பாக, தொற்றக்கூடிய அல்லது தொற்றாத நாள்பட்ட தோல் நோய்கள் உள்ளவர்கள் அவ்வாறான நிறுவனங்களுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதே நடைமுறையாகும். இது அரசாங்க மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

எனவே, குறித்த ஊழியரை பொருத்தமான வேறு நிலையத்துக்கு உடனடியாக இடமாற்றுவதுடன், அவருக்கு உரிய சிகிச்சை பெற உதவுவதே இலகுவான தீர்வாக இருக்கமுடியும். இதன் மூலமே எதிர்காலத்தில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாமென எண்ணுகிறேன். இந்தவிடயம் தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அல்லது உரிய அதிகாரிகள் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டு [illegible]

'அபிமானி'




மன்னார் மாந்தைச் சந்தியில இருக்கிற தேவாலயத்துக்குள்ள ஒரு மாதா சிலையைக் கட்டிப் போட்டு, திடீரெண்டு மதிலை உடைச்சுவிட்டினம். இப்ப அந்தச்சிலை றோட்டிலபோய் வாறவைக்கும் வடிவாய் துலக்கமாய் தெரியிறமாதிரி மாறிட்டு. ஆனால் சிக்கல் என்னெண்டால், இதே தேவாலயதுக்குப் பக்கத்தால போற றோட்டில, சிவராத்திரிக்காக திருகேதீச்சரக் கோயில்காரர் கட்டினை வளைவை, பாதர் தலைமையில கொஞ்சப் பேர் அடிச்சு உடைச்சவை. அந்த வழக்கு நீதிமன்றத்தில நடந்து கொண்டிருக்கு. அப்பிடி வழக்கு விசாரணை நடக்கிறதால, தேவாலயக்காரர் மதப் பிரச்சினையை உருவாக்கிற மாதிரி சிலை கட்டுறது, வளைவை அடிச்சு உடைக்கிறது எண்ட மாதிரியான வேலையளில இறங்கக்கூடாது எண்டது நீதிமன்றக்கட்டளை. அதை மீறுற மாதிரி மாதா சிலையைக் கட்டியிருக்கிறதாச் சொல்லித்தான் இப்ப வழக்குப் போட்டிருக்கினம். கொஞ்சக்காலமா ஒற்றுமையா அங்க இருந்த தமிழ்ச் சனங்கள் இப்ப - மதம்பிடிச்சு - வாரிகட்டிக் கொண்டு பிடுங்குபடத் தொடங்கிட்டினம்.

இப்பிடிப் பிடுங்குப்பாடு வரவேணும் எண்டதுதான் இன்னொரு மதக்காரரின்ர விருப்பம். அவையின்ர விருப்பப்படி, இதுவரைக்கும் அண்ணன் தம்பியாய் பழகின எங்கடசனம் இப்ப ஜென்ம விரோதியள் மாதிரி, மாறி மாறி சண்டை பிடிக்கத் தொடங்கிட்டினம். இந்த விசயங்களில ரண்டு தரப்பும் சின்னச்சின்ன விட்டுக் குடுப்புகளை செய்தாலே இந்தப் பிரச்சினை இல்லாமல் போடும். எண்டாலும் இப்போதைக்கு கூடுதலா தேவாலயப்பக்கம்தான் பிழை. ஏனெண்டா இப்பிடி ஒரு பிரச்சினை சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில நடந்து கொண்டிருக்கேக்க, தேவாலயத் திருவிழாவண்டைக்கு திடீரெண்டு றோட்டுப் பக்கமாய் சிலையை வைக்க வேண்டிய கட்டாயம் ஒண்டுமில்லையே. அப்பிடி மாதாவுக்கு சிலை வைக்கத்தான் வேணும் எண்டு மனசார விரும்பியிருந்தால், உட்பக்கமாக பார்க்கிற மாதிரி வைச்சிருக்கலாமே? கட்டாயம் மாதா றோட்டுப் பக்கம் தான் பாக்க வேணுமோ? எண்டு அங்கத்தைச் சைவச் சனம் கேக்குது. அவை கேக்கிறதிலையும் நியாயம் இருக்குத்தான். தேவாலயக்காரர் இதை இனியாவது கவனத்தில எடுக்கிறது நல்லம். ரண்டு மதக்காரரும் வெட்டுப்பட்டு, கொல்படுகிற அளவுக்கு நிலைமையைப் போகவிடாமல் முளையிலேயே கிள்ளுறது புத்திசாலித்தனமெல்லோ.

சரி, இது ஒருபக்கம் இருக்கட்டும். இனித்தான் முக்கியமான ஒருவிசயம். தேவாலயத்துக்கு உள்ளுக்க சிலையைக் கட்டிப்போட்டு, பிறகு மதிலை உடைச்சு, றோட்டுப் பக்கமும் மாதா சிலையை தெரியப் பண்ணினதுக்காக பொங்கிக் குதிச்ச சைவக்காரருக்குத்தான் இந்த விசயம். அந்த மாதா சிலையாவது தேவாலயக் காணிக்கு உள்ளுக்க இருக்குது. ஆனால் அதே தேவாலயத்துக்கு எதிர்ப்பக்கமா, றோட்டுக்கு மற்றப் பக்கம், (திருக்கேதீச்சரம் கோயிலுக்கு போற அதே றோட்டில) இப்ப புதிசா ஒரு பெரிய புத்தர் சிலையை வைக்க அவசர அவசரமா அத்திபார வேலையெல்லாம் முடிஞ்சு, மேல்பீடம் கட்டத் தொடங்கிட்டினம். வேலை நடக்கிற வேகத்தைப் பார்த்தால், சிவராத்திரிக்கு முதல் இல்லாட்டி இந்தமுறை வெசாக்குக்கு அங்க ஒரு புத்தர் வந்து குந்திடுவார். அதுவும் பொதுக் காணியில. கட்டின பிறகு என்ன செய்யிறதெண்டு அந்தரிக்காமல், இப்பவே புத்தர் சிலையை வைக்காமல் செய்யுங்கோ பாப்பம். இல்லாட்டி புத்தரில கைவைக்கப் பயமோ? என்னடா இது மாதாவுக்கு ஒரு நியாயம், புத்தருக்கு வேற நியாயமோ...?



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தம்மிக்கவின் சகோதரர் கொரோனாவால் சாவு!

கொழும்பு, பெப்.17

கொரோனாவைக் கட்டுப்படுத்த ஆயுள்வேத பாணி, தயாரித்து பிரபலமான, வைத்தியர் உதுமாகம தம்மிக்க பண்டாரவின், இளைய சகோதரர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், புற்று நோயால் பாதிக்கப்பட்டு வீட்டில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். கடந்த 12ஆம் திகதி வீட்டில் உயிரிழந்த அவரின் சடலம் கேகாலை மஹர மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்

## எதிர்க்கட்சி வலியுறுத்து

**கொழும்பு, பெப்.17**

**இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் மிச்சல் பச்லெட் சமர்ப்பித்துள்ள அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியில் பொது மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து அரசு கவனம் செலுத்தாமல் தேர்தலை இலக்காகக் கொண்டு செயற்படுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது.

எந்தத் தேர்தலில் போட்டியிடவும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. தேர்தலை நடத்த அரசு தான் தயாராகவில்லை. டொலர் நெருக்கடி, உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றம் என்ற இரு காரணிகளைக் குறிப்பிட்டு அரசு, கண்மூடித்தனமான வகையில் எரிபொருள் விலையைத் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. மிச்சல் பச்லெட் சமர்ப்பித்துள்ள அறிக்கையை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும். அறிக்கையின் உள்ளடக்கம் நாடாளுமன்றில் இரு நாள்களாவது விவாதிக்கப்பட வேண்டும். ஆணையாளரின் அறிக்கையில் இலங்கையின் ஊடகச்சுதந்திரத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானத்துக்குரியது - என்றார். (ஒ-4-இ)

# ஊழல் வழக்கிலிருந்து கெஹலிய விடுவிப்பு

கொழும்பு, பெப்.17

ஊழல் மோசடி வழக்கிலிருந்து, முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும், தற்போதைய சுகாதார அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் விமலசேன ரூபசிங்க மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்ரபால லியனகே ஆகிய மூவரையும் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்று விடுவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டுச் செயற்றிட்டம் ஒன்றுக்காக, குழாய்களை கொள்வனவு செய்தமை ஊடாக அரசுக்கு 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்படுத்தியமை தொடர்பில், இலஞ்ச ஊழல் சட்டத்தின்கீழ், மூவருக்கும் எதிராக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இது தொடர்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் 3 ஆணையாளர்களினதும் எழுத்துமூல அனுமதியின்றி இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அதனால் மீள வழக்குத் தாக்கல் செய்யும் நிபந்தனையின் கீழ், வழக்கை வாபஸ் பெற அனுமதிக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினர் நீதிமன்றைக் கோரினர்.

விடயங்களை ஆராய்ந்த நீதிவான் புத்திக சி ராகல, மீள வழக்குத் தாக்கல் செய்யமுடியும் எனும் நிபந்தனையின்கீழ், வழக்கை வாபஸ் பெற அனுமதித்து, பிரதிவாதிகள் மூவரையும் விடுவித்தார். (ஒ-4-இ)

# பெண்ணொருவர் சுட்டுக் கொலை



கொழும்பு,பெப்.17

துப்பாக்கிச் சூட்டில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை மத்துகமப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

களுத்துறை குற்றப்பரிசோதனைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையில், சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து, ரி-56 ரக 6 துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

உயிரிழந்த பெண்ணின் சடலம் களுத்துறை நாகொட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் கணவனைக் கொல்வதற்காகவே சந்தேகநபர்கள் வருகை தந்துள்ளனர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டபோது கணவன் வீட்டில் இருந்த நிலையில், அவர் அங்கிருந்து தப்பியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-4-இ)

## சர்வதேச நாணய நிதியத்தின்

# இலங்கை தொடர்பான அறிக்கை மிகவிரைவில்

கொழும்பு, பெப். 17

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது. அந்த அறிக்கை தொடர்பில் விவாதித்து நாம் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைவரம் தொடர்பில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்த அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

'ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. டொலரொன்று 250 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இத்தொகை 275 ரூபாவரை உயரக்கூடும். அத்தோடு நிறுத்தவில்லையென்றால் வருட இறுதிக்குள் 300 ரூபா வரை அதிகரிக்கக்கூடும். இதனால் எமக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கை 5 லட்சத்தால் அதிகரித்துள்ளது. நடுத்தர வர்க்கத்தினரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், எதிர்வரும் ஜூன், ஜூலைக்குள் வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. 6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இவ்வருடத்துக்குள் செலுத்தப்பட வேண்டியுள்ளது. நாம் இன்னும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தவில்லை. எனவே, கடனை செலுத்துவதற்கு நிதியை திரட்ட வேண்டியுள்ளது.


அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறித்தும் மாற்று முறைமையே கையாளப்படுகின்றது. வங்கி முறைமை கைவிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் யாப்பின் பிரகாரம், அந்த அமைப்பினர் நாடுகளுடன் கலந்துரையாடி, அந்த நாடு தொடர்பில் அறிக்கையொன்றை வழங்கவேண்டும். ஐ.எம்.எப். குழுவினர் டிசெம்பரில் இலங்கை வந்தனர். அவர்களின் அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும்.

அரசுக்கு அந்த அறிக்கை கிடைத்தவுடன் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அது தொடர்பில் விவாதம் நடத்தப்படவேண்டும். அறிக்கையிலுள்ள யோசனைகள் பற்றி ஆராயலாம். பொது இணக்கப்பாட்டுக்கு வரமுடியுமா என கலந்தாலோசிப்போம். அவ்வாறானதொரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

நமது நாட்டில் ஒரேயொரு தேசிய வளம் மட்டுமே உள்ளது. அந்தத் தேசிய வளம் இளைய தலைமுறையினர். அந்தக் குழுவைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்' -என்றார். (ம-44)

# 6 மாதங்களுக்குத் தேவையான மருந்துகளின் பட்டியல் தயாரிப்பு



கொழும்பு, பெப்.17

நாட்டில் அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் அத்தியாவசிய உபகரணங்களில் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

110 மில்லியன் ரூபா பெறுமதியுடைய அன்டிஜென் உபகரணங்கள் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

தட்டுப்பாடு இன்றி மருந்துகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெறும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி. மருந்துகள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

அதேவேளை, [illegible] பூசியின் மூன்[illegible] வழங்குவது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர் [illegible] தடுப் [illegible]ளது -என்றார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரத்தை அடக்க முயல்வது தவறு

## ஹானா சிங்கர் வலியுறுத்து

கொழும்பு,பெப்.17
கருத்துச் சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்து, ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பது அவசியம் என்று இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹானா சிங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்களின் பாதுகாப்புக் குறித்து அவர் தனது ருவிற்றர் பக்கப் பதிவில் தெரிவிக்கையில்;

ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் கண்டனத்துக்குரியவை. விமர்சனக் குரல்களை மௌனமாக்குவது பொதுவிவாதம். இது சுதந்திரம் மற்றும் அனைவரின் மனித உரிமைகளையும் குறை மதிப்புக்கு உட்படுத்தும் என்றுள்ளார். தென்னிலங்கையின் குடியியல் செயற்பாட்டாளர் செஹான் மாலக கமகே குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அத்துடன் ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவின் வீட்டின் மீது இனந்தெரியாதவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே



அவர் இந்தக் கருத்தைப் பதிவிட்டுள்ளார். (ஒ-4-இ)



ஒதியமலையில்

## மின்சார வேலியில் சிக்கி காட்டுயானை உயிரிழப்பு

முல்லைத்தீவு, பெப்.17
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில் மின்சாரவேலியில் சிக்கி காட்டுயானை ஒன்று நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது.

ஒதியமலை பகுதியில் காட்டுயானைகள் விவசாய நிலங்களை நாசம் செய்து வருவதால் குறித்த பகுதியிலுள்ள விவசாயத் தோட்டத்துக்கு மின்சார வேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் விவசாய நிலங்களை நாசம் செய்து வந்த காட்டுயானை ஒன்று மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுயானை உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் அயலவர்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு வழங்கிய தகவலையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் ஒட்டுசுட்டான் பொலிஸார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணை நடத்தினர்.

இதன்போது மின்சாரவேலியின் அனுமதி மற்றும் அதில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு இணைப்புக்கள் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் விசாரணை மேற்கொண்டதையடுத்து விவசாயக் காணியின் உரிமையாளர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19)

# மஹவ – ஓமந்தை ரயில் பாதை புனரமைப்பில் முறைகேடுகள்

## ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு,பெப்.17

**மஹவ - ஓமந்தை ரயில் பாதை புனரமைப்பில் பல்வேறு முறைகேடுகள் உள்ளன என்று குறிப்பிட்டு, ரயில் நிலைய அதிபர்கள் சங்கம், ஜனாதிபதிக்குக் கடிதம் சமர்ப்பித்துள்ளது.**

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியக் கடனுதவியுடன் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில், நிர்மாணிக்கப்படவுள்ள மஹவ முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதை நவீன மயப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக வடக்கு வீதியை அபிவிருத்தி செய்து இரட்டைப் பாதையாக தரமுயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. எனினும் ஏனைய நோக்கங்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை ஒற்றைப் பாதையாகச் சீரமைக்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றுள்ளது.

அதேவேளை, ரயில் பாதை சீரமைப்பால், அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையிலான ரயில் பாதை எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதி முதல் 5 மாதங்களுக்கு மூடப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இதனால் கொழும்பில் இருந்து அநுராதபுரம் வரையிலும், யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி வரையிலும் மட்டுமே ரயில்கள் இயக்கப்படும். (ஒ-4-இ)

## முன்னாள் பிரதேச செயலர் கொரோனாவால் உயிரிழப்பு



வவுனியா, பெப். 17
வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலரும், வவுனியா வடக்கு முன்னாள் பிரதேச செயலருமான க.பரந்தாமன் கொரோனாத் தொற்றால் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

சிகிச்சைக்காக கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ-ரி1-18)

## மிஷனரி சபையினருக்கும் மயானங்களை அமைக்குக

### ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.17
இந்துசமயம் மற்றும் கிறிஸ்தவ சமயத்துக்கு உரித்தான மயானங்கள் பிரதேச சபைகளால் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று, மிஷனரி சபையைச் சேர்ந்தவர்களுக்கும், மயானங்கள் அமைக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கிறிஸ்தவ சம்மேளனத்தின் ஏற்பாட்டில், மிஷனரிகளின் போதகர்கள் மற்றும் வடமாகாண ஆளுநருக்கு இடையிலான கலந்துரையாடல், அரியாலை பிலதெல்பியா மிஷனரி சபையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்திலுள்ள மிஷனரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆராயப்பட்டன. குறிப்பாக சபையினருக்கு மயானங்கள் இல்லாதமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடலின் இறுதியில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, மிஷனரி சபையினரால் கௌரவிக்கப்பட்டார். (ஒ-4,23)



## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 17
"திருவரங்கனின் மனக்கோலங்கள்" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் ஏற்புரையை நூலாசிரியர் க.திருவம்பலமும் நிகழ்த்துவார்கள். நூலின் முதற்பிரதியை தொழிலதிபர் அமிர்தநாதர் கொண்ஷன் பெற்றுக்கொள்வார். இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் கலந்துகொள்வார். (ஒ-ரி1)

# தொலைபேசி மூலமாக இருவரிடம் நிதி மோசடி

## பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.17
தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்கள், இரு வேறிடங்களில் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

சித்தன்கேணியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு அழைப்பை ஏற்படுத்தியவர்கள், அதிர்ஷ்டலாபச்சீட்டில் பெருந்தொகை பணம் கிடைத்துள்ளது. அதற்கு ஒரு லட்சத்து 90ஆயிரம் ரூபா பணத்தை, இலங்கை வங்கியில் வைப்பிலிடுமாறு தெரிவித்துள்ளனர். குறித்த பெண் தங்க நகையை அடகு வைத்து பணத்தை வைப்புச் செய்து[illegible] தொடர்பிலக்கம் [illegible] பாதிக்கப்பட்ட பெண், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதேபோன்று சங்கரத்தை துணைவிப் பகுதியில் வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொதி வந்துள்ளது என்று ஆண் ஒருவருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்கள், 60 ஆயிரம் ரூபா பணத்தை சம்பத் வங்கியில் வைப்பிலிடுமாறு கூறியுள்ளனர். அவரும் பணத்தை வைப்பிலிட்டபின்னர், தொடர்ந்து அந்த இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தினார். அதுவும் [illegible]து. அவரும் பொலிஸில் [illegible]பாடு பதிவு செய்துள்ளார். (ஒ-4-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமானம் குறைந்தவருக்கு 2,000 ரூபா டிஜிற்றல் அட்டை

கொழும்பு, பெப்.17

**வருமானம் குறைந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் நோக்குடன், 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய, டிஜிற்றல் அட்டையை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வரவு- செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட விரிவான பொருளாதார அபிவிருத்தி தேசிய வேலைத் திட்டத்தின்கீழ், இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குறைந்த வருமானம் கொண்ட 40 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, பிரதேச செயலரின் பரிந்துரைக்கமைய, 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய டிஜிற்றல் அட்டை வழங்கப்படும். இந்த அட்டையைப் பயன்படுத்தி, பெண் தொழில் முயற்சியாளர்களை அடிப்படையாகக் கொண்ட சிறியளவிலான பல்பொருள் விற்பனை நிலையங்கள், உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)



## கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கமைய, அராலி வீதி, பொம்மைவெளியில் 56 கிராம் கஞ்சாவுடன் ஒருவரும் சின்னக்கோவில், இருபாலையில் 20 கிராம் கஞ்சாவுடன் மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-ரி1-23)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி, பெப். 17

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் நுணாவில் பகுதியில் 30 வயது நபரொருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார் என்று சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து சாவகச்சேரி மதுவரி நிலையத்துடன் இணைந்து குறித்த நபரை சோதனையிட்டபோது அவரின் உடைமையிலிருந்து 2 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1-9)

## கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம், பெப்.17

கைதடி, தெற்கு தக்கடியன்புலம் ஸ்ரீஞான வைரவர் சுவாமி கோயிலின் நிரந்தர பூசகராகக் கடமையாற்றிய ஸ்ரீலஸ்ரீ சு. குணசேகரத்தை கௌரவிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசியுரையை கோவில் நித்தியகுருக்கள் கஜராஜன் குருக்கள் ஆற்றவுள்ளார்.

அத்துடன் கைதடி ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரம தலைவர் இ.குழந்தைவடிவேலு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் அ.லோகநாதன் மற்றும் முன்னாள் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான இ.சத்தியநாதன் ஆகியோர் பாராட்டுரைகளையும் வழங்கவுள்ளனர். (ச-159)

## சிமெந்து விற்பனை நிலையம் முற்றுகை

கொழும்பு,பெப்.17

அதிக விலைக்கு சிமெந்து விற்பனை செய்த நிலையமொன்று, நுகர்வோர் அதிகார சபையினரால் முற்றுகையிடப்பட்டது.

அநுராதபுரம் அலுவலகத்துக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, அநுராதபுரத்திலுள்ள குறித்த விற்பனை நிலையம் சுற்றிவளைக்கப்பட்டது.

அங்கு விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 200 சிமெந்து மூடைகளும் கைப்பற்றப்பட்டன. (ஒ-4-இ)

## கஞ்சாவுடன் மூவர் கைது



கிளிநொச்சி, பெப். 17

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு பகுதியில் நேற்று முன்தினம் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூன்று சந்தேகநபர்களை சோதனையிட்ட போது அவர்களின் உடைமையில் 5 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் 15 வயது தொடக்கம் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டு, அவர்கள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஒ-ரி1-113)

## முல்லைத்தீவு,

## அம்பலப்பெருமாள் குளத்தில் 330 ஏக்கரில் சிறுபோகம்



அம்பலப்பெருமாள் குளத்தின்கீழ் 330 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை துணுக்காய் பிரதேச செயலர் ச.லதுமீரா முன்வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அம்பலப் பெருமாள் குளத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் சட்டங்களை மதித்து பயிர்ச்செய்கையில் ஈடுபடவேண்டும்.

பயிர்ச் செய்கையின் போது கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். விவசாய சட்டங்கள் ஊடாகவே பயிர்ச் செய்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சட்டங்களை மீறி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போதே பிரச்சினைகள் தோன்றுகின்றன. சட்டரீதியாக ஒழுங்குகளைப் பேணி விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடும்போது பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. ஆகவே விவசாயிகள் ஒற்றுமையாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வெற்றிபெறவேண்டும் -என்றார். (ஒ-ரி1-13)

## சீனிக்குள் 'சிற்றிக் அசிட்' வவுனியாவில் முறைப்பாடு

கொள்வனவு செய்யப்பட்ட சீனியில், ஒருவகையான இரசாயனம் கலப்படம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில், நபரொருவர், வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் முறைப்பாடளித்துள்ளார்.

வவுனியா, பஜார் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் கொள்ளவனவு செய்யப்பட்ட சீனிப் பொதியிலே இவ்வாறு கலப்படம் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பில் அதிகார சபையினரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை முன்னெடுப்போம் -என்றனர்.

சீனியைப் பொதியிடும்போது, குளிர்பானம் தயார் செய்ய பயன்படுத்தப்படும் சிற்றிக் அசிட் தவறுதலாகக் கலந்துள்ளது என்று வர்த்தக நிலையத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-4-இ)


## மரண அறிவித்தல்



**சந்திரா நீலாம்பாள்**

யாழ்ப்பாணம் 186, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரா நீலாம்பாள் நேற்று (16.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திராஐயர் (சந்திரா) ஈஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வியும், கமலாம்பாள் காலஞ்சென்ற சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள் (JP), கிரியாம்பாள் ரகுபதிசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

070 67 111 81, 077 57 111 81 தகவல்: குடும்பத்தினர்.

(CS 18984) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**நாளொரு நல்வார்த்தை**

"நீங்கள் ஒரு யோசனையை நிராகரிப்பதற்கு முன், அதைப் பற்றிக் குறைந்தது ஐந்து நல்ல விடயங்களைக் கண்டறியுங்கள்." - *தோமஸ் அல்வா எடிசன்*

## வெள்ளைச் சாயம்!

கல்லுண்டாய்வெளி மக்களுக்கு குடிதண்ணீரை இலவசமாக விநியோகிக்கும் பணியை இராணுவம் பொறுப்பெடுத்துள்ளது. இதுவரைகாலமும், மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவின் நிதியொதுக்கீட்டின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகமே குறித்த பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கிவந்தது. ஆனால், நிதியொதுக்கீடுகள் மற்றும் நிதிப்பற்றாக்குறை காரணமாக பிரதேச செயலகத்தின் குடிதண்ணீர் விநியோகத்தில் தொய்வு நிலை ஏற்பட்டது. இதனையடுத்து, அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு மாவட்டச் செயலகத்தின்பிரதிநிதிகளும், மானிப்பாய்பிரதேசசபையின் தவிசாளர் அ.ஜெபநேசனும் நேரடியாகச் சென்று, 70 குடும்பங்களைக் கொண்ட குறித்த பகுதிக்கு தினமும் 500 லீற்றர் குடிதண்ணீர் இலவசமாக வழங்கப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியிருந்தனர். அப்படி தமது பகுதிக்கென வழங்கும் குடிதண்ணீரின் அளவு போதாது என்றும், ஒவ்வொரு குடும்பத்துக்கும் நாளாந்தம் 500 லீற்றர் தண்ணீர் தரவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால் அப்படி வழங்குவதாயின் தினமும் 35 ஆயிரம் லீற்றர் தண்ணீர் தேவைப்படுமெனவும், அதைக் கட்டணமின்றி இலவசமாக வழங்குவதென்பது தமது இயலுமைக்கு அப்பாற்பட்டது எனவும் கூறி பிரதேச சபை பின்வாங்கியது. இதனையடுத்தே அந்தப் பகுதி மக்களுக்கு தற்காலிக ஏற்பாடாக தினமும் 8 ஆயிரம் லீற்றர் தண்ணீரை இராணுவம் வழங்கத் தொடங்கியிருக்கிறது.

வலிகாமம் வடக்கிலும் இவ்வாறு இராணுவத்தினரால் சில இடங்களுக்கு தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மக்களுக்கு படையினர் குடிதண்ணீர் விநியோகிப்பது நல்ல விடயமே. ஆனால், அப்படி விநியோகிக்கும் தண்ணீரைஇராணுவம் எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றது? என்ற மிகப்பெரிய கேள்வியும் கூடவே எழுகின்றது. குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதேச செயலகங்களும், பிரதேச சபைகளும் திக்குமுக்காடிக் கொண்டிருக்கையில் இராணுவத்தினர் அவ்வளவு இலகுவாக அதைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறாக இருக்கும் பின்னணி நிச்சயம் ஆராயப்பட வேண்டியதொன்று. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்ட குடிதண்ணீர் திருட்டுகள் மற்றும் தவறான கையாடல்கள், இந்த விவகாரத்தை ஆராயவேண்டும் என்ற கோரிக்கைக்கு மேலும் வலுச்சேர்க்கின்றன. வலி. வடக்கில் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் அடாவடியாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இன்னமும் இருக்கின்றன. அந்தக் காணிகளுக்குள் இருந்து இந்தத் தண்ணீர் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கோ அல்லது விவசாய நிலங்களுக்குச் சொந்தமான தண்ணீரை இராணுவம் கையாளவில்லை என்பதற்கோ என்ன உத்தரவாதம்?

குடிதண்ணீர் விநியோகத்துக்கான மனிதவலு இராணுவத்திடம் தாராளமாகவே இருக்கின்றது. இதற்கு செலவாகும் எரிபொருள் இராணுவத்துக்கான ஒதுக்கீட்டிலேயே, கணக்குக் காட்டப்படும். இதே ஒதுக்கீடுகளை, சலுகைகளை பிரதேச செயலகத்துக்கோ அல்லது உரிய சிவில் கட்டமைப்புக்களுக்கோ ஒதுக்கினால், ஏன் அந்தச் சேவையை துறைசார் தரப்பினரால் வழங்கமுடியாது?

சிங்களத் திணிப்புகளுக்கும், பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புகளுக்கும், நில அபகரிப்புகளுக்கும், திடீரென முளைக்கும் பௌத்த சிலைகளுக்குப் பின்னணியிலும் இராணுவத்தின் வகிபங்கு என்ன என்பது வெள்ளிடைமலைபோன்ற நிலைதான். இப்படியிருக்கையில், தன் மீதான குற்றச்சாட்டை – களங்கத்தை – எதிர்ப்பை – அழுத்தத்தை – கையாள்வதற்கும், தன் மீதான மக்களின் மனோநிலையை மாற்றியமைப்பதற்கும் இந்த வெள்ளைச் சாயத்தை இராணுவம் பூச முயல்கின்றதா? என்ற சந்தேகமும் வலுப்பெறவே செய்கின்றது.

இராணுவ மயமாக்கல் என்பது தெருவுக்குத் தெரு இராணுவத்தைக் குவித்தலும், அளவுக்கதிமாக இராணுவ விகிதாசாரமும் மட்டுமல்ல. சிவில் கட்டமைப்புகளில் வெளிப்படுத்தப்படும் இப்படியான அதீத தலையீடுகளும் இராணுவ மயமாக்கல்தான். மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற ஆத்மார்த்தமான அக்கறை உங்களுக்கு இருந்தால், ஒதுக்கீடுகளையும் வளப்பங்கீடுகளையும் உரிய சிவில் கட்டமைப்புகளுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்குங்கள். அதைவிடுத்து சீருடையினருக்கு வெள்ளைச் சாயமடிக்கும் வேலைகளில் அரசு ஈடுபட்டால், மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய சிவில் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைவதோடு, எம் மண்ணின் வளங்களும் கண்முன்னே சூறையாடப்படும் அபாயமும் உண்டு.



# ஒற்றையாட்சி நாடு என்பதால் 'ஒரே நாடு ஒரே சட்டம்' தேவை

*அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு*



**கொழும்பு, பெப். 17**

**இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடாக உள்ளமையாலேயே 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதன் தேவை ஏற்பட்டுள்ளது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியின் தலைவர் ஞானசார தேரர் உள்ளிட்ட குழுவினர், நீதி அமைச்சர், வெளிவிகார அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போதே அமைச்சர் சரத் வீரசேகர, 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியிடம் மேற்கண்டவாறு கூறியதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அரச பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, நாட்டுக்குள் ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியிடம் எடுத்துரைத்துள்ளார். (ஒ-இ)

## நெருக்கடியான தருணத்தில் கைகொடுத்தது இந்தியா

*அமைச்சர் நன்றி தெரிவிப்பு*

கொழும்பு,பெப்.17

இலங்கை தற்போது நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள தருணத்தில், இந்தியா வழங்கிய உதவியை வரவேற்கின்றோம் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தது.

அந்தக் கப்பலை வரவேற்க எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சென்றிருந்தார். அவருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் பங்கேற்றார். இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு இந்தியா பொறுப்புடன் செயற்படுகின்றது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## 89 இலங்கைத் தமிழர்கள் அமெரிக்காவில் தடுப்பில்

கொழும்பு,பெப்.17

முகாமிலிருந்து தப்பிச் சென்ற 20 சிறுவர்கள் உட்பட 89 இலங்கைத் தமிழர்கள், அமெரிக்காவின் டியேகோ கார்சியா கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனை பிரிட்டிஷ் அரசு உறுதி செய்துள்ளது என்று ஆசிய பசுபிக் அகதிகள் உரிமை வலையமைப்பு தெரிவித்துள்ளது.

நடுக்கடலில் காப்பாற்றப்பட்ட இவர்கள் அமெரிக்காவின் டியேகோ கார்சியா கடற்படைத் தளத்தில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம், மூன்றாம் திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பிரிட்டன் உறுதி செய்துள்ளது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

18.02.2022
வெள்ளிக்கிழமை
மாசி 06

சுபநேரம் : 06.32 – 08.02
ராகுகாலம் : 11.02 – 12.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தத் தீர்மானம்

**கொழும்பு,பெப்.17**

**விலையை அதிகரிக்க அனுமதிக்காவிடில், அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் எரிபொருளை விநியோகிக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.**

இது தொடர்பில் அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவிக்கையில்:- பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தினசரி 100 கோடி ரூபாவுக்கு மேல் இழப்பைச் சந்திக்கின்றது. எனவே, எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டியது கட்டாயம். இல்லையெனில் இந்த மாதத்தில் ஏற்படும் நஷ்டம் அதிகரித்து, நிறுவனம் கடும் நிதிச்சரிவைச் சந்திக்க நேரிடும். இரண்டாவது தடவையாகவும் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விலை உயர்வை அங்கீகரிக்காவிடில், எதிர்காலத்தில் பெற்றோல், டீசல் விலை அதிகரிக்கும். மின் உற்பத்தி நிலையங்கள், புகையிரதங்கள், பயணிகள் பேருந்துகள், முப்படைகள், பொலிஸ் மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிப்பதற்குத் தீர்மானிக்கப்படும்-என்றார். (ஒ-4-இ)

## இடியன் துப்பாக்கியுடன் தருமபுரத்தில் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப்.17
கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி இடியன் துப்பாக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இராணுவத்தினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)




கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.



## பொலிஸாருக்கு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.17
யாழ்.மாவட்ட 15 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பெண்கள் சிறுவர் பிரிவு மற்றும் சிறு குற்றங்கள் தடுப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை, யாழ். பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.
தேவை நாடும் மகளிர், (வின்) அமைப்பினால் நடத்தப்பட்ட பட்டறையில், இணையத்தள வன்முறை தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்தல், குற்றங்களைப் பதிவு செய்து நடவடிக்கைகளைப் பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தல், இணையத்தள வன்முறை தொடர்பான சட்ட ஏற்பாடுகள் ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.
சேவையை இலகுபடுத்தும் நோக்கில், பொலிஸாருக்கான செய்முறை தொடர்பான நூலும் வழங்கப்பட்டது. (ஒ-4-இ)

## கைத்தொழில்களை மேம்படுத்தினால் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு

### விமல் நம்பிக்கை

கொழும்பு,பெப்.17
தேசிய கைத்தொழில்கள் மேம்படுவதால், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
கைத்தொழில் துறைசார் வல்லுநர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.
எமது உற்பத்திகளுக்கு முன்னுரிமையளிக்கும் பயணத்துக்கான நம்பிக்கை வைத்தே, ஜனாதிபதி அதிகாரத்துக்குக் கொண்டு வரப்பட்டார். எதிர்காலத்திலும் அந்த நம்பிக்கையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து, தேசிய கைத்தொழில்துறையை மேம்படுத்தும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.
கைத்தொழில்கள் முன்னரைவிட தற்காலத்தில் புத்துயிர்பெற்று வருகின்றன. கைத்தொழிலாளர்களுக்கு தற்போதைய சவால் ஆசீர்வாதமாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## கமக்கார அமைப்பு நிர்வாகத்தெரிவு

முல்லைத்தீவு, பெப்.17
முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள்குள கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த. பிரியதர்சினி தலைமையில் நடைபெற்றது.
இதில் கமக்கார அமைப்பின் தலைவராக மு.சின்னத்தம்பி, செயலாளராக வ.ஜெயச்சந்திரன், பொருளாளராக சி.சிறிராஜீம் , உபதலைவராக க.விஜிதரன் மற்றும் உபசெயலாளராக கு.நிசாந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் உறுப்பினர்களாக 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச -13)

## மஹோற்சவம்



யாழ்ப்பாணம், பெப். 17
ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 15 நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும், மார்ச் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், இரவு மஹா சிவராத்திரி உற்சவமும் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு "கண்டகி" தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும், மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஒ-ரி1-125)

### அரசுக்குள் மற்றொரு பிளவு

## வெளியேறுவதற்கு லான்சாவும் தயார்

கொழும்பு, பெப். 17
தெற்கு அரசியலில் சர்ச்சைக்குரிய அம்பலப்படுத்தலொன்றை வெகு விரைவில் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வெளியிடுவாரென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான நிமல் லான்சா, கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு பதவியை வகிக்கின்றார்.
எனினும், அமைச்சின் செயலாளரின் தலையீடு, அரசியல் காரணிகள் உட்பட மேலும் சில விடயங்களை அடிப்படையாகக்கொண்டு குறித்த அமைச்சு பதவியைத் துறப்பதற்கு நிமல் லான்சா தயாராகிவிட்டார் எனவும், இதன் ஆரம்பக்கட்டமாக தனது பிரத்தியேக பணியாளர்களை அமைச்சிலிருந்து விலக்கியுள்ளார் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
இராஜினாமாக் கடிதத்தைத் தயார் நிலையில் வைத்துள்ள நிமல் லான்சாவை சமரசப்படுத்தும் முயற்சியில் மொட்டுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.
பஸில் ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்படும் நிமல் லான்சா ஏன் இத்த கையதொரு நகர்வை கையாள் கின்றார் என்பது ஆளுங் கட்சியினருக்கு வியப்பாக உள்ளது. அண்மைக்காலமாக அர சின் செயற்பாடுகளையும் அவர் கடுமையாக விமர்சித்துவருகின்றார். நிமல் லான்சாவை சமரசப்படுத்தும் முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில், முக்கியமான சில விடயங்களை அம்பலப்படுத்தி விட்டு, அவர் பதவி துறப்பாரென தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தி ாகரராசா
அரசர த்தினம்

(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி காரைநகர்)



பிறப்பு 18.04.1942 — இறப்பு 14.02.1995

திதி : மாசி மகம்

நெஞ்சமதில் என்றும் ஈரம் கசிய
வஞ்சமில்லா புன்னகையோடும்
அஞ்சிடாத நேர்மை கொண்டும்
தஞ்சம் தந்தெமைக் காத்த அப்பாவே!
நஞ்செனக் காலம் மாறிய நாளில்
கெஞ்சி நாம் நிற்க நீங்கள் விண்ணேகி
இருபத்தேழு ஆண்டுகளாகியும்
ஆறாத துயரேந்திகளாய் நாம்..!

நினைவுகளோடு...!

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 01 . 1930 — மறைவு 16 . 02 . 2022

### இராமலிங்கம் தம்பையா

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராம லிங்கம் தம்பையா அவர்கள் நேற்று (16.02.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சின்னத்தங்கம் தம்பதி களின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற செல்லப்பா மற்றும் நல்லம்மா, சோமசுந்தரம், அன்னம்மா, இராமலிங்கம், நேசம்மா(ஓய்வுநிலை உப அதிபர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரோஜினிதேவியின் ஆருயிர் கணவரும், முரளீ தரன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), இரகுராம் (சுவிஸ்), தங்கசொரூபி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலி மேற்கு பிரதேச சபை சுழிபுரம்), ஆகி யோரின் பாசமிகு தந்தையும், வைதேகி (சிங்கப்பூர்), ஜனனி (சுவிஸ்), கண்ணதாசன் (உப அதிபர் யா/விக்டோரியா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், இபானன், தீசிசன், ஈஷாயினி (சிங்கப்பூர்), அக்ஸ்யா (சுவிஸ்), கார்த்திகன், ஆதிரை (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகள் - 077 6621 882
மருமகன் - 077 6621 790

தகவல்: குடும்பத்தினர்.

(CR 7287) 1/6

## வேலையாட்கள் தேவை


ஊற்காவற்றுறையில் உள்ள பலசரக்குக் கடைக்கு அனுபவமுள்ள ஆண் வேலை யாட்கள் தேவை.

வயதெல்லை - 20 - 40 வரை இருக்கவேண்டும்.
ஆரம்பச் சம்பளம் : 60, 000 - 90, 000 வரை வழங்கப்படும்.

(CS 42977) (3/6)

தொடர்பு : 077 067 4452

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 14.08.1933 — மறைவு 16.02.2022

அமரர்
### தம்பிராசா கனகநாயகம்

(அருள்மிகு உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய கோவில்- முன்னாள் செயலாளர்)

அவர்களது பிரிவுத் துயரிலுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல சிதம்பர சுப்பிரமணியன் பாதம் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய கோவில் பரிபாலன சபையினர்.

(CR 7286 C)1-6

## கண்ணீர் அஞ்சலி



### திரு.தம்பிராசா கனகநாயகம்

அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் முன்னாள் தலைவர்

மாசிமாத பூரணை தினம் அம்மன் கோயில் அவரது உபயமாக நடைபெற்று வந்தது. அன்றைய தினம் அன்னார் அமரத்துவம் அடைந்தது போற்றுதற்குரியது.

அவரது ஆன்மா என்றும் அம்பாள் அடியில் சாந்திபெற பிரார்த்திப்ப தோடு அவர்களை இழந்து நிற்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பரிபாலன சபை
உரும்பிராய் பர்வதவர்தனி அம்மன் கோயில்

(CR 7286 B) 1/6

# கொரோனா தொற்றால் ஒருவர் சாவு!

கொடிகாமம், பெப்.17

கொரோனாத் தொற்றுக் காரணமாக மிருசுவிலைச் சேர்ந்த ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 58 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார் என்றும், அவரது சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-159)

## 10 இலட்சம் அதிர்ஷ்டம்

தேசிய லொத்தர் சபையால் முன்னெடுக்கப்படும் சீட்டிழுப்பு ஒன்றில் புதுக்குடியிருப்பு பிரதேசவாசி ஒருவருக்கு பத்து இலட்சம் ரூபா கிடைத்துள்ளது. கடந்த 5ஆம் திகதி குலுக்கப்பட்ட அதகோடிபதி சீட்டிழுப்பிலேயே அவருக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. (வ-19)

### வீடு வாடகைக்கு உடன் தேவை

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உடன் தேவை. (Town,Nallur) விரும்பத்தக்கது.
உடன் தொடர்புகளுக்கு:
074 166 7875

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரி, நல்லூர் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

T.P: 077 4064 241 / 077 8380 007

### தவறவிடப்பட்டது

2016,2017ம் ஆண்டிற்குரிய மறுக்கப்பட்ட/ மறுக் கப்படாத BOC 00439248 இலக்கம் கொண்ட காசோலை கள், பற்றுச்சீட்டுக்கள் பூநகரி - கிளிநொச்சிக்கு இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

077 8448 083 ஞா.விமலகாந்

### Air Condition விற்பனைக்கு


அரபு நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட பாவித்த நல்ல நிலையில் உள்ள L.G. 2 1/2 Ton Air Condition விற்பனைக்கு உண்டு.

72, Karaikadu Lane,
Vannar pannai, Jaffna.

(CS 18587) (3/6)

077 257 1005, 0097 433 627819 (All Media)

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 11 . 1941 — இறப்பு 16 . 02 . 2022

### கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம் (தவம்)

சந்தையடி லேன் மானிப்பாயை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம் (தவம்) அவர்கள் நேற்று (16.02.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சௌந்தரிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ் சென்ற சீனிவாசகம்- சின்னத்தங்கத்தின் அன்பு மருமகனும், தனபாலசிங்கம் இராஜேஸ்வரி யின் (குஞ்சன்ரா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, சுவாமிநாதன், துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜீவகன் (ஜீன்-பிரான்ஸ்), ஜீவிதன் (ஜீவி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி ஸ்ரீபுர, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், நதியா (பிரான்ஸ்), சர்மிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், இனியா, திலானி (பிரான்ஸ்) தருன், திருன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.02.2022) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு யா/கோம்பயன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.இல:077 9590 934

(CR 7288)

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 08 . 1933 — மறைவு 16 . 02 . 2022

### தம்பிராசா கனகநாயகம்

யாழ். உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா கனகநாயகம் நேற்று (16.02.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா செல்லமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா பவளம்மாவின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சத்தியா (ஜேர்மனி), மதிரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நவமணி, மலர்மணி, ராஜநாயகம், செல்வநாயகம், குணநாயகம், அரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரத்தினேஸ்வரி (அமரர்) இராஜேஸ்வரி, ஜெயச்சந்திரன் (அமரர்) ஜெயபாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், கருணாநிதி, சுகந்தி ஆகியோரின் மாமனாரும், இரதீதன் - கஜனவி, றக்ஷியா, மதுஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.

(CR 7286 A)1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| | |
|---|---|
| மண்மகிழ்வு | கண்நெகிழ |
| 17 . 03 . 1946 | 13 . 02 . 2022 |



## ஆறுமுகம் கிருஷ்ணமூர்த்தி

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

சுழிபுரம் கல்லைவேம்படியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கிருஷ்ணமூர்த்தி கடந்த (13.02.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதிரம்பிள்ளை - சின்னம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஞானகௌரி (ஜேர்மன்), ரவிக்குமார் (ஜேர்மன்), சிவகௌரி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கண்ணன், சாருனியா, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனும், இராசதுரை, பூமாதேவி, ஞானம்பிகை, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சஞ்சய், காயத்திரி, அருளினி, ஹிரிராம், இஷானி, யானுகா, சந்தோஷ், ஆரானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விஜயரட்ணம், நடராஜா, சரோஜா, வரதராஜா, பத்மாவதி, ஜெயந்தி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை அவரது சுன்னாகம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs 42974) (2.6)

## யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள பிரதான "சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.04.2022 தொடக்கம் 31.03.2023 வரை

யாழ். போதனாவைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 01.04.2022 தொடக்கம் 31.03.2023 வரையான காலப்பகுதிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

01. வைத்தியசாலை பகுதியில் உள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.
02. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் "கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 17.02.2022 தொடக்கம் 10.03.2022 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 04.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 02.03.2022 ம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
04. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
05. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
06. விலைக் கேள்விகள் கடித உறையின் மேல் பகுதியில் சிற்றுண்டிச்சாலையின் பெயரினைக் குறிப்பிட்டு 11.03.2022 திகதி (மு.ப) 10:00 மணிக்கு முன்பதாக இப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் அன்றைய தினம் (11.03.2022) (மு.ப).11:00 மணிக்கு கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
07. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
08. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் / தொலைபேசி இலக்கங்களுடன் 021 222 2260, 021-222 7764 தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
09. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் பிரதான சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.


தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(cr 37594) (2.6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 26 . 09 . 1949 | 16 . 02 . 2022 |



## மாணிக்கம் வைத்திலிங்கம்

நவாலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் வைத்திலிங்கம் அவர்கள் நேற்று (16.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மகிழ்மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், ஐயாத்துரை முத்தம்மா தம்பதியரின் மருமகனும், கமலாவின் (ஓய்வுபெற்ற SPHM) அன்புக் கணவரும், விமலன் (அதிபர், யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை), சியாமளா (கனடா), மஞ்சுளா (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிவதனி, பாபுகரன் (கனடா), பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வைஷ்னவன், வித்தியாகரன், விஷ்னுபிரியா, தமி, பரணி, லோஜினி, சோபனா, அபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனும், பரமலிங்கம், அன்னலிங்கம், பரமேஸ்வரன், நாகேஸ்வரி, மங்கையர் திலகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, ராதாதேவி, யமுனா, தங்கராசா, சிவலிங்கம், பகவதி, அமரர் கனகம்மா, மகேஸ்வரி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் எற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
வை.விமலன்-மகன்
(அதிபர் - யா/அராலி வள்ளியம்மை
ஞாபகார்த்த வித்தியாசாலை)
077 918 4210, 077 5745 197, 021 225 6863

(CS 18598 1/6)

# மரண அறிவித்தல்

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 04 . 03 . 1934 | 16 . 02 . 2022 |



## இராசமணி நடராஜா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 16/6, கெனடிலேன், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி நடரா‌ஜா நேற்று (16.02.2022) புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், விக்கினராஜா, ஆனந்தராஜா, விஜயராணி, யமுனாராணி, மகேஸ்வரராஜா, காலஞ்சென்றவர்களான கலாராணி, ஶ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு தாயாரும், சியாமளாதேவி, லக்ஸ்மிகாந்தன், செல்வராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், துளசிகா, சிவதர்சிகா, சிந்துஜன், தீபிகா, லக்ஷனன், லக்ஸ்மினா, லக்சனா, டவ்னியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாற்பண்ணை செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/6, கெனடிலேன்,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
நடராஜா விக்கினராஜா
077 172 6839 - இலங்கை

(cs42979) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குழந்தைகளால் பெருமிதம் உண்டாகும். மகிழ்ச்சி கூடும். வீண் விவாதம் வேண்டாம். நண்பர்களுக்கு உதவுவீர்கள். சீரான நாள். பணப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள்.

**இடபம்:** பணியாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் நன்மைகள் உண்டு. இனிமையான நாள். நல்ல செய்திகள் வர வாய்ப்புள்ளது. உங்களின் செயற்றிறன் கூடும்.

**மிதுனம்:** தந்தை மூலம் நன்மை உண்டாகும். நட்பு வட்டம் விரியும். நிம்மதி மீளும். கலைஞர்களுக்கு நல் வாய்ப்புத் தேடி வரும். பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது.

**கடகம்:** வேலை மாறுவது பற்றி இப்போது யோசிக்க வேண்டாம். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த செய்தி ஒன்று வரும். ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். கூடுதலாக உழைக்க வேண்டிவரும்.

**சிம்மம்:** குடும்பத்தினருடன் விட்டுக் கொடுத்து சென்று நன்மை அடைவீர்கள். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். பணம் வந்தாலும் சுபச்செலவுகளால் பற்றாக்குறை நீடிக்கும்.

**கன்னி:** உங்களுடைய சிறு எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். குறைந்த செலவில் முடிக்க வேண்டிய விடயத்துக்கு அதிக செலவாகலாம். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. நினைத்தது நிறைவேறும்.

**துலாம்:** கூடுதலாக உழைத்து நன்மையடையும் நாள். வியாபார வெற்றி உண்டு. பரபரப்பான நாள். உணவில் கவனமாக இருங்கள். அழகுணர்ச்சி கூடும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம்:** பிரிந்தவர்கள் சேரும் நாள். உடன்பிறந்தோரின் உதவி கிடைக்கும். வெளியூர், வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். பொறுப்புகள் கூடும் நாள். கிடைக்க வேண்டிய பணம் வந்து சேரும்.

**தனுசு:** பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு தாமதப்படும். பணியிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். பொறுமை தேவை. விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** எதிலும் தாமதம் காரணமாக சற்று வெறுப்படையும் நாள். தவறு செய்பவர்களைத் தைரியமாகத் தட்டிக் கேட்பீர்கள். கடன் பிரச்சினை உங்களது கட்டுப்பாட்டுக்குள் வரும்.

**கும்பம்:** பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு அதிகரிக்கும். நற்செய்தி ஒன்று வரும். நன்மை கிடைக்கும் நாள். திடீர் நன்மை உண்டு. நன்கொடை வழங்கி நிறைவு காண்பீர்கள்.

**மீனம்:** வாழ்க்கை முறையில் சில மாறுதல்களைச் செய்வீர்கள். குடும்பத்தில் இருந்த சலசலப்பு நீங்கி மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத்துணைக்கு உங்களால் நன்மை ஏற்படும். ஆஞ்சநேயரை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.



இராசையா ஸ்ரீதரன்

# மகிமை நிறைந்த மாசி மக விரதம்

பரம்பொருளான சிவபெருமானுடைய விரதம். மாசி மகம். இது மாண்பும், மகிமையும் நிறைந்த ஒரு புனிதமான நல்ல பயனைத் தரக்கூடிய புண்ணிய விரதமாகும். இந்த விரதம் ஒவ்வொரு வருடமும் மாசி மாதத்திலே வரும். இந்த விரதத்தை அனுஷ்டிக்க விரும்புவோர் காலை எழுந்து ஸ்நானஞ் செய்து சிவசிந்தனையுடன் சந்தியா வந்தனம் முடித்து, விநாயகப் பெருமானை நினைந்து வணங்கி, சிவாலய தரிசனத்துடன் ஆரம்பிக்கலாம். இந்த விரதத்தை முறையாக அனுஷ்டித்தால் புத்திரபாக்கியம் இல்லாதவர்களுக்கு சந்தான விருத்தி கிட்டும் என்றும் சொல்லப்படுகின்றது. அத்துடன் முற்பிறவியில் செய்த பாவவினைகள் அகன்று போய்விடும்.



"அதி தேவதையான வருணபகவானை பிரமஹத்தி தோஷம் பீடித்துக் கொண்டது. அது அவரைச் சமுத்திரத்தின் உள்ளே அடியிலே போட்டுக் கட்டி வைத்திருந்தது. இதையறிந்த தேவர்கள் சிவபெருமானிடம் அறிவித்தனர். தேவர்கள் முறையிட்டதால், சிவபெருமான் வருணபகவானைக் கட்டறுத்து விடுதலை பண்ணினார். அவ்வாறு சிவபெருமான் வருணபகவானின் பிரமஹத்தி தோஷக் கட்டறுத்த புனித நன்னாள்தான் இன்றைய மாசிமகம். விடுதலைபெற்ற வருணன் சிவபெருமானைப் பணிந்து வணங்கி, "பிரபு ! எனக்கு விடுதலை கிடைத்த இந்த நல்ல நாளில் பூலோக மக்களும் நன்மையடைய வேண்டும்.

இன்றைய நன்னாளில் ஆறு, நதி, கடல், சமுத்திரம் முதலியவற்றில் நீராடி வணங்குபவர்கள் பாவங்கள் நீங்கி நற்கதி பெறுதல் வேண்டும். இதுவே என்னுடைய வேண்டுதல்- என்றாராம். சிவனும் அப்படியே ஆகட்டும் என வரமளித்தார்" என்று பூர்வீக வரலாறு கூறுகின்றது. தக்கனின் மகளாக உமாதேவியார் அவதாரம் செய்த தினமும் இந்த மாசி மகம்தான். எனவே நாம் இன்றைய மாசிமகம் என்கின்ற மகா விரதத்தைக் [illegible] வித புருஷார்த்தங்களையடைந்து நற்கதி பெறுவோமாக.

# விவசாயிகள் கதைகூறும் கோவிதாத்தா திரைப்படம்

யாழ்ப்பாணம், பெப்.17

எதிர்காலத்தில் சேதனப் பசளை விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக தயாரிக்கப்பட்டுள்ள கொவிதாத்தா திரைப்படம் வெளியாகியுள்ளது.

இந்தத் திரைப்படம் தொடர்பில் திரைப்படக்குழுவினர் தெரிவிக்கையில்;

இந்தத் திரைப்படம் தெற்குப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மட்டுமல்ல, வடக்கில் உள்ள விவசாயிகளுக்குமாக உருவாக்கப்பட்டுள்ளது. சரத் பண்டார கொக்வெவ திரைப்படத்தை தயாரித்துள்ளார். இதற்கான இசையை சசிக்க ருவாண் மாரசிங்க வழங்கியுள்ளார். பெரும்பான்மை இன மொழித் திரைப்படங்கள் அதிகளவு தென்னிலங்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

தெற்கிலுள்ள படைப்புகள் வடக்குக்கு வந்தது இல்லை என்றே கூறவேண்டும். முதல்முறையாக தமிழ் உப தலைப்புகளுடன் இந்தத் திரைப்படம் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படுகின்றது.

தமிழ் பேசும் மக்களும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தமிழ் உப தலைப்புகளுடன் இந்தத் திரைப்படம் வெளியிடப்படுகின்றது.

தமிழ் பேசும் மக்களுக்கு இந்தத் திரைப்படத்தின் செய்தி போய்ச்சேரவேண்டும். அடுத்த படைப்பாக தமிழ் திரைப்படம் ஒன்றை நாங்கள் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கவுள்ளோம். அதற்காக தென்னிந்திய திரைப்பட நடிகை சமந்தாவை ஒப்பந்தம் செய்யத் தீர்மானித்துள்ளோம் -என்றும் தெரிவித்தனர். (ஒ-4-23)

# எறிபத்த நாயனார் குருபூசையும் சிறப்புச்சொற்பொழிவும்

"எறிபத்த நாயனார் "குருபூசையும் சைவப்புலவர் திருவருள்வாசகர் கா.கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நெடுங்குளம் அம்பலவாணர் அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில்" எறிபத்த நாயனாரின் பக்தி நெறி " என்ற தொனிப்பொருளில் சைவப் புலவர் திருவருள்வாசகர் கா.கமலநாதனின் சிறப்புச்சொற்பொழிவும் .அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன், குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களைப் பாராட்டிப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஒ-ரி1)

# தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தின இசை ஆராதனை

யாழ்ப்பாணம், பெப்.17

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 175 ஆவது பஞ்சரத்தின இசை ஆராதனை நிகழ்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைத்துறையில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று, அதனைத்தொடர்ந்து சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசையை வெளிப்படுத்துமுகமாக நாதஸ்வர, தவில் இசையும், ஈழத்தின் தலைசிறந்த இசைக்கலைஞர்கள், விரிவுரையாளர்களின் பங்குபற்றலுடன் பஞ்சரத்தின இசை ஆராதனையும் மாணவர்கள், விரிவுரையாளர்களின் கீர்த்தனாஞ்சலியும் இடம்பெற்றன. (ஒ-ரி1-125)



# நிர்வாகத் தெரிவு

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்க யாழ். மாவட்டக் கிளை நிர்வாகத்தெரிவு, கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் இடம்பெற்றது. வடமாகாண இணைப்பாளர் த. இராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிர்வாகத் தெரிவில், அகில இலங்கை பிரதம செயலாளர் சந்தண சூரியாராச்சி முன்னிலையில் தலைவராக க.சிறீகரன், செயலாளராக வி.தயாபரன், பொருளாளராக ரி.சுதா[illegible] உப தலைவராக இ.தர்மே ந்திரா, உப செயலாளராக எம். சிவாஜி, உறுப்பினர்களாக எம்.மோகனபவன், [illegible] சசிகுமார், பி.எம்.நிரோசினி, ஆர். வாசுகி, பி.தேனுஜா, எஸ்.நித்தியா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-ரி1-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 08 . 1950

மறைவு 15 . 02 . 2022



## இராமநாதன் செல்லத்துரை

புத்தூர் வடக்கு ஏரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் செல்லத்துரை நேற்று முன்தினம் (15.02.2022) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் சின்னப்பிள்ளை அவர் களின் மகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சாந்தம்மா மற்றும் சிவநாதன், தங்கராசா, பாலகிருஷ்ணன் (கனடா) அரசரட்ணம் (கனடா), இராமகிருஸ்ணன், பிருந்தா ஆகியோரின் சகோதரரும், இராசதுரை, ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனரும், கபிலன் (ஜேர்மனி), ராகுலன் (ஜேர்மனி), கஸ்தூரி (லண்டன்), கௌசல்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜிதா, பிருந்தா, ஞானகரன், சுபாகரன் ஆகியோரின் மாம னாரும், விவன்ஜா, வர்சிகா, வர்சிகன், அபிஷனா, அகிசதன், சஜீகா, சஜீதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் புத்தூர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
கஸ்தூரி : 077 803 4085
சுதாகரன் : 077 991 0076

(CS 42980) (3/6)

**தகவல்:**
குடும்பத்தினர்
புத்தூர் வடக்கு, ஏரந்தனை.

# மரண அறிவித்தல்

மண்ணில் 10 . 05 . 1988

விண்ணில் 15 . 02 . 2022



## சிவதாசன் கஜந்தன்

(உரிமையாளர் வைரவப்புளியங்குளம் வாகன சுத்திகரிப்பு நிலையம்)

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சிவதாசன் கஜந்தன் நேற்றுமுன்தினம் (15.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் சிவதாசன் மற்றும் கமலாம்பிகை சிவதாசன் ஆகியோ ரின் கனிஷ்ட புதல்வனும், வினுசாவின் பாசமிகு கணவரும், ஜரிசின் அன்புத் தந்தையும், சிவந்தி, கஜலன், கஜந்தி (லண்டன்), றஜந்தி ஆகியோரின் அன்புத் தம்பியும், விஜயராஜ் - நகுலேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிறிக்கந்தகுமார், மதன் (லண்டன்), மாலினி, விமல்ராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விபுசனன் (லண்டன்), வித்தகன் (பிரான்ஸ்), கேசிகா (லண்டன்), நித்திலம் (லண்டன்), காலஞ்சென்ற துஷானி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அப்சராவின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பண்டாரிக்குளம் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
குடும்பத்தினர்
077 365 2433, 077 317 1366,
044 786 797 8202

**இல. 44/01, அம்மன் கோவில் வீதி,**
**பண்டாரிக்குளம்,**
**வவுனியா.**

(cs 00966) (2.6)

# மரண அறிவித்தல்



## கைலாயர் இராசரத்தினம்
## (அம்மளாச்சி)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை மேற்கை வதிவிட மாகவும் கொண்ட கைலாயர் இராசரத்தினம் (அம்மளாச்சி) அவர்கள் நேற்று முன்தினம் (15.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி கைலாயர் முத்துப் பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத் துரை இரத்தினம் ஆகியோரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், சகிலா (சுவிஸ்), செல்வகிரி (லண்டன்), துஷ்யந்தன் (சுவிஸ்), புவிந்தன் (பிரான்ஸ்), ஹேமச்சந்திரன் (ஆசிரியர்), நிறோஜன் (பிரான்ஸ்), அனுஷன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தை யும், தயாளரஞ்சன் (சுவிஸ்), லம்போதரன் (லண்டன்), விஜயவதனி (சுவிஸ்), உசாந்தினி (பிரான்ஸ்), கிரிஷாந்தி (ஆயுள்வேத மருத்துவர்), விதுசனா (விரிவுரையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், செல்லம்மா, பத்மாவதி, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, குணரத்தினம், இரத்தினம், புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான துரைராசா, தங்கராசா, முருகையா, செல்வராணி, தெய்வேந்திரம் ஆகியோரின் மைத்துனரும், வைஷ்ணவி, இலக்கியன், லினோஜன், றனோஜிகா, டிலக்சிகா, ஆராதனா, நதுர்சன், சாருஜன், அவெந்திக்கா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அனுஷன் - 077 596 2428
ஹேமச்சந்திரன் - 076 155 3572

**தகவல்:**
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி
## அன்பழகி இராசேந்திரம்

மண்ணில் 05 - 04 - 1958

விண்ணில் 16 - 02 - 2022

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிட மாகவும் கொக்குவில் கிழக்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்பழகி இராசேந்திரம் அவர்கள் நேற்று (16.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்னெறவர் களான இளையதம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசேந்திரம் அவர்களின் பாசமிகு மனைவி யும், பத்மினி, பார்த்தீபன், காண்டீபன், காயத்திரி, சயந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், நதீசன், அனித்தா, ஜீவிதா, சுகுமாரன், பிரதீப் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற அன்பழகன் மற்றும் மதியழகி, ஸ்ரீஅழகி, அறிவழகன், மதியழகன், திருவழகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரவதனா, வன்னியசிங்கன், குணசேகரம், ஸ்ரீரங்கநாயகி, தவச்செல்வன்.இராசலட்சுமி, அன்னலட்சுமி, காலஞ்சென்ற மகாலட்சுமி, மற்றும் சின்னத்துரை, மகேந்திரன், விசயலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், நிவேதா, சாயித்தியன், அஸ்வின், அமாயா, அஹானா, அக்ஷித், அக்ஷரா, தரணிதா, வருணிதா, அக்ஷயா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 129, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(நந்தாவில் அம்மன் கோவில் முன்பாக)

தகவல்
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:

இராசேந்திரம் (கணவர் - இலங்கை) - 077 188 4509
சுதன் (மகன் - லண்டன்) - 0044 770 891 8129
தீபன் (மகன் - பிரான்ஸ்) - 0033 684 947238
நதீசன் (மருமகன் - பிரான்ஸ்) - 0033786625810
ராசன் (சகோதரர்) - 00447448042561

(CR 37522) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாவாவுடன்...

நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் சந்தேகநபரைச் செல்ல அனுமதித்த நீதிவான், வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-எ-23)

### கஞ்சாவுடன்...

வர்களாவர். வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டபோது கஞ்சாப் பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 700 மில்லிகிராம், 510 மில்லிகிராம், 530 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-23)

### யாழ்...

கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-27)

### வடக்கில்...

தெரிவித்ததாவது:-
நான்கு வாரங்களுக்குள் நாட்டில் 4 மலேரியாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இரண்டு வாரங்களுக்குள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இரு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.
இந்த ஆண்டில் இதுவரை 6 மலேரியாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள். அவர்களில் 4 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர் - என்றார். (அ-எ-இ)

### மூன்று...

என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கொரோனா, டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் பரவும் வீதம் தற்போது அதிகரித்துச் செல்கின்றது. காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அது தொடர்பாக ஆராய வேண்டும். கவனவீனமாகச் செயற்பட வேண்டாம்.
காய்ச்சல் ஏனையோருக்கும் பரவும் என்பதால், நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார். (எ-இ)

### 20ஆம்...

வர்களின் உறவினர்கள் ஒழுங்கமைத்துள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி யோ.கனகரஞ்சினி நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.
அவர் அங்கு தெரிவித்ததாவது:-
வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் 5 ஆண்டுகள் ஆகின்றன. இலங்கை அரசு எமது கோரிக்கைகளைக் கணக்கில் எடுக்காது செயற்படுகின்றது. இலங்கை அரசிடம் நீதி கிடைக்காத நிலையில், சர்வதேசத்திடம் நீதி கோரி வருகின்றோம்.
எதிர்வரும் 20ஆம் திகதி பெரும் பேரணி ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். எங்கள் போராட்டத்துக்கு கிராம மட்ட அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், தமிழ்த் தேசியத்தை நேசிப்பவர்கள், அரசியல்வாதிகள், அரசியலுக்கு அப்பால் நின்று செயற்படுவோர் என அனைத்துத் தரப்பினரும், கடந்த காலங்களைப் போன்று ஆதரவு தர வேண்டும் என்று கோருகின்றோம் - என்றார். (அ-எ-113)

### பயங்கரவாத....

பயங்கரவாதத்துக்கான புதிய வரைவிலக்கணத்துடன் பயங்கரவாதக் குற்றமும் தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று நம்புகின்றோம் என்று, இந்தமாத முற்பகுதியில் இடம்பெற்ற இராஜதந்திரிகளுக்கான மாநாட்டின் போது இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்திருந்தது.
நாட்டின் பொதுச்சட்டத்தின் கீழ் தேவையான திருத்தங்களுடன் பயங்கரவாதம் தொடர்பிலான விடயங்களை விசாரிக்க வேண்டும் என ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.
பயங்கரவாத் தடைச் சட்டத்தின் கீழ் கால வரையறையற்ற காவலில் வைக்கப்படுவது அரசமைப்பை மீறுவதாக உள்ளது என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

### ஈழத்...

வேண்டும்.
இவ்வாறு அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் - நல்லூரில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற "ஈழத் தமிழரின் இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய பிராந்திய சர்வதேச நிலைவரங்களும்" என்ற தொனிப்பொருளிலான மக்கள் கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உலக அரசியல் அரங்கில் இவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. கிரிமியாவின் விடயத்தை அருகிலுள்ள பேரரசு ரஷ்யா தீர்மானிக்கிற நிலையில் திபெத்தின் இருப்பை அருகில் இருக்கும் சீனா தீர்மானிக்கிறது. அதேபோல் கஷ்மீரின் இருப்பை அருகில் இருக்கும் இந்தியா தீர்மானிக்கிறது. கிழக்குத் திமோர் இருப்பை அருகில் இருக்கும் அவுஸ்திரேலியா தீர்மானிக்கிறது.
இதுவே உலக ஒழுங்கு. இதன் அடிப்படையில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் உலக நாடுகள் தீர்வை முன்வைத்தாலும் அது ஒரு பேரம்பேசல் அடிப்படையிலே இருக்கும். இலங்கையின் அண்மைய நாடான இந்தியா வழங்கும் தீர்வானது ஒப்பீட்டளவில் சிறியதாக இருந்தாலும் வலுவானதாக அமையும்.
இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர், இலங்கைத் தமிழ் மக்கள், இந்தியத் தலைவர்களான நேரு, காந்தி, மாதாஜி, சுபாஷ் சந்திரபோஸ், என பலரது உருவப்படங்களை தமது வீடுகளில் வைத்திருந்தார்கள். இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இந்தியா தனது நலனுக்காக தமிழ் மக்களின் பிரச்சினைகளை அணுக ஆரம்பித்தது.
ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்குப் பின்னர் அரசியல் ரீதியாகத் தீர்வை நோக்கி தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். தமிழ் மக்களுக்கான தீர்வு ஏன் இன்னும் எட்டவில்லை? தீர்வை நோக்கி நாம் சரியாக நகருகிறோமா ?என்ற கேள்விகளுக்கு அப்பால் தமிழினம் உருமாற்றம் பெற்ற ஒரு தலைவரை உருவாக்க வேண்டும்.
ஆறு கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து 13ஆவது திருத்தத்தை இந்தியா நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரி கடிதம் எழுதினார்கள். ஆனால், 1989 ஆம் ஆண்டு புலிகளும் இலங்கை அரசாங்கமும் இந்திய இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் எனக் கூறினார்கள். இந்தநிலையில் தமிழ்க் கட்சிகள் கேட்கும் 13 ஐ இந்தியா எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறது? என்பதில் எனக்கு சில புரிதல்கள் தேவைப்படுகின்றன.
அமெரிக்க - ரஷ்ய பனிப்போர் தமிழ் மக்கள் அழிவுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ள நிலையில் மேற்கு நாடுகள் பல நாடுகளின் இனப்பிரச்சினைக்கு தீர்வையும் வழங்கியுள்ளன. கொசோவா, ஸ்கொட்லாந்து, கிழக்குத் திமோர் ஆகியன சுதந்திர நாடாக மக்கள் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றுவதற்கு மேற்கு நாடுகளே வழிவகுத்தன.
இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவினால் நாசம் செய்யப்பட்ட ஜப்பான் மீண்டும் அதே நாட்டின் உதவியுடன் உலகின் முன்னணி தொழில்நுட்ப நாடாக உருமாறியது.
இதே போன்றநிலையே தமிழ் மக்களுடைய விடயங்களிலும் இடம்பெறக்கூடும். மயிர்க்கொட்டியில் இருந்து வண்ணத்துப்பூச்சி உருமாறியதைப் போல் தமிழ்மக்களுக்காக , உருமாற்றம் பெற்ற பிரச்சினைகளை அணுகக்கூடிய ஒரு தலைவரை உருவாக்குவது காலத்தின் தேவையாகும் - என்றார். (அ-எ-20)

# மயிலிட்டித் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் - மயிலிட்டித்துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.
படகுகளைக் கட்டிவைப்பதற்கு துறைமுகத்தை ஆழப்படுத்தி, அகலமாக்குதல், படகுகள் கட்டுவதற்கும் திரும்பிச் செல்வதற்குமான பாதைகளை அமைத்தல், துறைமுகத்தை அழகுபடுத்துதல், மீனவர்களுக்கான தங்குமிட வசதி, சிற்றுண்டிச்சாலை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை முதன்மைப்படுத்தி இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த வருட இறுதிக்குள் இரண்டாம் கட்டப் பணிகள் முடிவடைந்து மூன்றாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார். (வ-27)

### மீனவர்கள்...

தொடர்பில் விரைவில் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
இந்திய அரசாங்கமும் கலந்துரையாடலுக்கான இணக்கத்தை தெரிவித்துள்ளது. பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ள படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

### ஜெனிவாவில்...

பில் எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் பெரியளவு கலந்துரையாடல்கள் இடம்பெறவிருக்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உப தலைவர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.
கண்டியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கருத்துத் தெரிவிக்கும் உரிமை நாட்டின் அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் உரிமையாகும். அதைத் தடுப்பதற்கு யாராவது முயற்சித்தால், சர்வதேசம் அதுதொடர்பில் விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும்.
அரசாங்கம் இதுவரைக்கும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றது. இதுதொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பவர்களுக்கு கருத்துக்களை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதற்கு ஆரம்பித்திருக்கின்றது.
அண்மைக்காலமாக ஊடக சுதந்திரத்துக்கு எதிரான பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அதனால் நாட்டில் ஊடக சுதந்திரம் மீறப்பட்டு வருவது தொடர்பில் இடம்பெற இருக்கும் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் பெரியளவில் கலந்துரையாட வாய்ப்பு இருக்கின்றது. அது நாட்டுக்கு மிகவும் பாதகமான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு இடமிருக்கின்றது - என்றார். (எ-இ)

### உயிரிழந்தவர்களுக்கு...

சந்தர்ப்பங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.
அதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரின் சடலங்களை தகனம் செய்வது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.
நாட்டில் கொரோனா பரிசோதனைத் தொகுதிகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது என்று தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையிலும், நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் நாளாந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையிலும் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.
அதேநேரம், கடந்த காலங்களில் உயிரிழந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பலருக்குத் தொற்றிருந்தமை உறுதி செய்யப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் கூட, குளத்தில் மூழ்கி உயிரிழந்த தென்மராட்சியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும், வவுனியாவில் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த ஒருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவர்களுக்குத் தொற்றிருந்தமை உறுதி செய்யப்பட்டிருந்தது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரற்ற கால்வாய்களை பொறுப்பெடுத்தது பிரதேசசபை

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கால்வாய்கள் மற்றும் கால்வாய் தடுப்புச் சுவர்கள் புனரமைப்பு மற்றும் தூர்வாரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத தால், மக்கள் நலன்கருதி, பிரதேசசபை அவற்றைப் பொறுப்பெடுத்துள்ளது.

இதுதொடர்பில் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவிக்கையில்:-

காங்கேசன்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள கால்வாய்க்கான பாதுகாப்புச் சுவர் சேதமடைந்துள்ளது.

குறித்த கால்வாயைத் தூர்வாருமாறு பலமுறை கடிதங்கள் அனுப்பியும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை எந்த வித செயற்றிட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. எமது பிரதேசசபையால் குறித்த கால்வாய் தூர்வாரப்பட்டு, பாதுகாப்புச் சுவர் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்துள்ள வாய்க்காலையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பராமரிப்புக்கு உட்படுத்தாத நிலையில், வாய்க்கால் புனரமைப்புக்காக நல்லூர் பிரதேசசபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. - என்றார். (ஒ-4,125)



### பளுதூக்கல் போட்டியில்

## யாழ். பல்கலைக்கழக மாணவிகளுக்கு வெள்ளி

யாழ்ப்பாணம், பெப். 17

இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான பளுதூக்கல் போட்டியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 42ஆவது அணி சார்பாக பங்குபற்றி இரண்டு மாணவிகள் வெள்ளிப்பதக்கம் வென்ற னர்.

இதற்கமைய 87 கிலோ எடைப்பிரிவில் பங்குபற்றிய ஜீவமலர், 71 கிலோ எடைப்பிரிவில் பங்குபற்றிய திவ்யா ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர். (ம-ரி1,27)

## கொழும்பு மாநகர சபையினர் யாழ்ப்பாணத்துக்குப் பயணம்

கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க உள்ளிட்ட குழுவினர் எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இந்தக் குழுவினர் யாழ். மாநகரசபை மற்றும் வலி.தென்மேற்குப் பிரதேசசபை ஆகியவற்றுக்கு பயணிக்கவுள்ளனர். கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 70 பேர் வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

## சந்தேகநபர் கைது

வழிப்பறியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர், காரைநகர் வீதியில், கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தவேளை, அவ்வீதியால் பயணித்த ஒருவர் அவரது கைத்தொலைபேசியைப் பறித்துச் சென்றுள்ளார்.

இளைஞர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ம-4-125)

**பணிப்பெண் தேவை**

கோப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை. வயதெல்லை 35 வயதிற் குட்பட்டவர்கள் சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும். (CS 42975) (3/6)

077 170 1432 / 077 345 3868

**பெண் ஊழியர் தேவை**

உடுவில் மகளிர் பாடசாலைக்கு அண்மையில் உள்ள கடை ஒன்றிற்கு பெண் ஊழியர் தேவை.

(CS 42976) (3/6)

தொடர்பு : 074 016 7518

**Smart Panel**

NALIN Information Technologies (Pvt) Ltd.

திறன் வகுப்பறை
Smart Class Room

பாவனை முறைமை தொடர்பான **இலவசப் பயிற்சிகள்** தொடர்சியாக வழங்கப்படும்.

வேறு நிறுவனங்களால் பொருத்தப்பட்டு பராமரிப்புக் கிடைக்காவிடின் அவற்றிற்கான பயிற்சிகள் பராமரிப்புக்கள் வழங்கப்படும்.

துல்லியமான தொடுதிரைகளுடன் கூடிய **Smart Panel**

எமது நிறுவனம் சிறந்த தொழிநுட்ப வல்லுநர்களை ஒருங்கிணைத்த **வடமாகாணத்தை** தலைமையகமாகக் கொண்ட ஒரே ஒரு நிறுவனம்.



SPECIAL OFFER 5%

65"-75" Full HD
Android Window 11 System
with i5 / i7 | 8GB
500 GB SSD System

பாடசாலைகள் கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்வி நிலையங்கள், தனியார் வகுப்பறைகள் போன்றவற்றிற்கான திறன் வகுப்பறை (Smart Panel Systems) மிகச் சிறந்த முறையில் மிக குறைந்த விலையில் நிறுவித் தரப்படும்.

3 Years FULL Warranty

194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Email – info@nit.lk | Contact No - 077 542 7426

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி விற்பனைக்கு. 16 பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

புன்னாலைகட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி.

074 269 0854

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

A-32 பிரதான வீதியில் இருந்து 600 m தூரம்.

பார்வையிடும் நேரம்:

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

தரகர் தேவையில்லை.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.




தொடர்பு: 077 814 7389
077 117 8578

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.

நிலப்பரப்பு

A-32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்.

பயன்தரும் 137 தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்). பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

ஒரு பரப்பின் விலை 350,000/=

தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 814 7389
077 117 8578

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 22 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்

A-32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்.

பார்வையிடும் நேரம்:

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

ஒரு பரப்பின் விலை 300,000/=

தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 814 7389
077 117 8578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.